**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

**வேளாண் வானிலை ஆலோசனை மையம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்**

**மற்றும்**

**மண்டல வானிலை மையம்,இந்திய வானிலைத் துறை , சென்னை.**

எண். 93/2021

நாள் 19.11.2021

நாள் 1 (20.11.2021) : இடியுடன் கூடிய கனமழை திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, **சேலம்,** ஈரோடு, **நாமக்கல்,** கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

நாள் 2 (21.11.2021) : இடியுடன் கூடிய கனமழை கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, **சேலம்,** திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

## வானிலை ஆலோசனை அறிக்கை – நாமக்கல் மாவட்டம்

**மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் முறையே 31.0° செ. (87.8° பா) மற்றும் 22.5° செ.(72.5° பா) – யாக நிலவியது. நாமக்கல் மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பதிவாகியுள்ளது.

**நாமக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (16.11.2021 – 17.11.2021) | | காரணிகள் | அடுத்த நான்கு நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (20.11.2021 – 23.11.2021 ) | | | |
|---|---|---|---|---|---|---|
| நாள் –1 16/11 | நாள் – 2 17/11 | தேதி | நாள் –1 20/11 | நாள் – 2 21/11 | நாள் – 3 22/11 | நாள் – 4 23/11 |
| 6 | 3.6 | மழை (மி.மீ) | 30.0 | 10.0 | 10.0 | 25.0 |
| 31.0 | 30.0 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 27.0 | 29.0 | 30.0 | 31.0 |
| 23.0 | 22.5 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22.0 | 23.0 | 23.0 | 23.0 |
| பொதுவாக மேகமூட்டம் | பொதுவாக மேகமூட்டம் | மேகமூட்டம் (ஆக்டா) | பொதுவாக மேகமூட்டம் | பொதுவாக மேகமூட்டம் | பொதுவாக மேகமூட்டம் | பொதுவாக மேகமூட்டம் |
| 73 – 82 | 78 – 92 | காற்றின் அதிக மற்றும் குறைந்தபட்ச ஈரப்பதம் (%) | 65 – 95 | 65 – 90 | 70 – 90 | 65 – 90 |
| 4 | 0 | காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 6 | 4 | 4 | 4 |
| வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தெற்கு | தென் கிழக்கு | வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (20.011.2021 முதல் 23.11.2021 வரை)**

அடுத்த நான்கு நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில், வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்பட்டு, இடியுடன் கூடிய கன மழை மாவட்டத்தின் பல இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. பகல் வெப்பம் 31.0° செ.(87.8° பா) –க்கு மிகாமலும், இரவு வெப்பம் 22.0° செ. (71.6° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் தெற்கு மற்றும் தென் மேற்கிலிருந்தும், அதன் வேகம் மணிக்கு 4 – 6 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 65 – 95 % மாக நிலவும்.

**அடுத்த நான்கு நாட்களுக்கு நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படும் மழையின் அளவு (மி.மீ )**

| தேதி (நா– மா– ஆ) | எலச்சிபாளையம் | எருமைப்பட்டி | கபிலர்மலை | கொல்லிமலை | மல்லசமுத்திரம் | மோகனூர் | நாமகிரிப்பேட்டை | நாமக்கல் | பள்ளிபாளையம் | பரமத்தி | புதுச்சத்திரம் | ராசிபுரம் | சேந்தமங்கலம் | திருச்செங்கோடு | வெண்ணந்தூர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20.11.2021 | 0.5 | 1.1 | 2.4 | 1.8 | 0.0 | 1.4 | 0.2 | 1.1 | 1.6 | 2.1 | 0.3 | 0.1 | 1.4 | 1.3 | 0.0 |
| 21.11.2021 | 5.3 | 19.5 | 8.2 | 34.4 | 3.0 | 10.7 | 16.0 | 13.9 | 5.6 | 8.1 | 6.8 | 10.7 | 24.1 | 4.3 | 6.1 |
| 22.11.2021 | 14.5 | 23.4 | 10.8 | 37.5 | 21.3 | 9.7 | 21.3 | 15.8 | 21.5 | 10.7 | 11.6 | 21.0 | 31.9 | 21.8 | 19.0 |
| 23.11.2021 | 14.0 | 16.8 | 5.5 | 31.7 | 21.6 | 4.4 | 20.2 | 13.5 | 21.1 | 6.2 | 11.4 | 19.0 | 28.4 | 22.6 | 17.6 |

**கால்நடை, கோழிகள் மற்றும் வேளாண் வானிலை ஆலோசனை, (கா.உ.மே.து, நாமக்கல்)**

| கால்நடைகள், கோழிகள் மற்றும் பயிர்கள் | நிலை | வானிலை ஆலோசனை |
|---|---|---|
| கால்நடைகள் | பொதுவான | **<u>மழை காலத்தில் கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை</u>**<br>✓ தொடர்ச்சியாக மழை பெய்யும் போது தீவன பயிர்களின் வளர்ச்சி குறிப்பாக தீவன புற்களின் வளர்ச்சி வேகம் அதிகரித்து விரைவில் முதிர்ச்சி அடையும். மழை காரணமாக அறுவடை தாமதம் ஏற்படின் முதிர்ந்த புற்களில் நார்சத்து அதிகரித்து தீவனத்தின்செரிமான திறன் குறையும். நார்சத்தின் செரிமான திறனை அதிகரிக்க ஈஸ்ட் நொதியை 5 முதல் 10 கிராம் வரை தீவனத்தில் சேர்க்கவும். அதே சமயத்தில், இளம் வளரும் புற்களை கறவை மாடுகள் உண்ணும் போது பாலின் கொழுப்பு சத்து குறைய வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க நார் சத்து நிறைந்த வைக்கோல், சோளம், கம்பு, ராகி தட்டைகள் மற்றும் பருத்தி கொட்டை புண்ணாக்கு ஆகியவற்றை தீவனமாக கொடுக்கலாம்.<br>✓ தொடர் மழை பெய்யும் சமயத்தில் தீவன பயிர்களில் உள்ள சர்க்கரை, கொழுப்பு மற்றும் தாது உப்புகள் நீரில் அடித்து செல்லப்படுவதால், மேற்படி சத்துகள் குறைபாட்டை நிவர்த்தி செய்ய கலப்பு தீவனத்தை 250 கிராம் கூடுதலாக கொடுக்க வேண்டும் அல்லது 50 கிராம் தாது உப்பு கலவையை தீவனத்தில் சேர்த்து கொடுக்க வேண்டும்.<br>✓ கால்நடைகளுக்கான கலப்பு தீவனத்தை மழை காலங்களில் உலர்ந்த இடத்தில் 15 நாட்களுக்கு மிகாமல், தரையில் படாமல், பலகையின் மேல் சேமித்து வைக்கவும். தீவன மூட்டைகளை பக்கவாட்டு சுவற்றில் இருந்து குறைந்த பட்சம் ஒரு அடி இடைவெளி விட்டு காற்றோட்டமாக அடுக்கி வைக்க வேண்டும். மழைகாலத்தில் காற்றின் ஈரப்பதம் அதிகம் இருக்கும் என்பதால், கலப்பு தீவனத்தின் ஈரப்பதம் 11 % மேல் அதிகரிக்கும் போது புஞ்சை நஞ்சு ஏற்பட வாய்ப்புள்ளது. தவிர, மூட்டைகளிலிருந்து அன்றாட தேவைக்கான கலப்பு தீவனத்தை எடுத்தபின் சாக்கு பையை காற்று புகாமல் கட்டி வைக்க வேண்டும். |
| **கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகம் நாமக்கல்** | | |
| கோழிகள் | பண்ணை கோழிகள் | கடந்த வாரம் இவ்வாய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் **இறக்கை அழுகல் மற்றும்** குடல்புண் நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளது என தெரியவந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோழிக்கு அளிக்கப்படும் தீவனத்தில் நுண்ணுயிர் கிருமிகளான கிளாஸ்டிரியம், ஸ்டெப்லோகாக்கஸ் மற்றும் ஈகோலை ஆகியவற்றின் தாக்கம் உள்ளதா என பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல் தீவன மேலாண்மை முறைகளைக் கையாளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.<br>மேலும், மழைக்காலமாக இருப்பதால் கோழிப்பண்ணை மற்றும் தீவன ஆலைகளில் மழைநீர் ஒழுகாமல் சரி செய்யுமாறும், தீவனத்தில் பூஞ்சை நச்சு தடுப்பான் உபயோகிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள். |
| **வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல்** | | |
| காய்கறி, மரவள்ளி மற்றும் பழ மரங்கள் | பொதுவான | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் காய்கறி மற்றும் மரவள்ளி சாகுபடியாளர்கள் வடிகால் வசதி ஏற்படுத்தி நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும், பழ மரங்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மரத்திலிருந்து 4 – 5 அடி தள்ளி நீள வாக்கில் 2 அடி ஆழத்தில் குழி எடுப்பதால் மழை நீரை உள்ளே போகச் செய்து சேமிக்கலாம். |
| பயிர்கள் | பொதுவான | ✓ மழைக்காலத்தில் காய்கறி பயிர்கள் சேதம் ஏற்படாமல் இருக்க பந்தல் அமைப்பின் வலிமையை சரிபார்க்கவும்.<br>✓ மழைக்காலத்தில் பயிர்கள் மற்றும் செடிகளுக்கு பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களை தெளிப்பதைத் தவிர்க்கவும்.<br>✓ காற்றினால் வாழை மரங்கள் உடைவதைத் தவிர்க்க மூங்கில் அல்லது சவுக்குமர கம்பத்தில் முட்டுக்கொடுத்தல் வேண்டும்.<br>✓ மழைக்காலத்தில் மண் அரிப்பைத் தடுக்கும் வகையில் வயல் வரப்புகளைப் பலப்படுத்தவும். |


தொழில்நுட்ப அலுவலார்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல்

பேராசிரியர் மற்றும் தலைவர் & ஒருங்கிணைப்பாளர்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல்